அது மட்டுமல்ல, மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்தபோது மேட்டூர் அணையில் நீர் அதிகமாக இருந்த காரணத்தினால், 6-6-2011 அன்று குறுவை சாகுபடிக்காக முன்கூட்டியே தண்ணீர் திறக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஜூன் 12 ஆம் தேதிக்குப் பிறகு திறப்பதற்குப் பதிலாக முன்கூட்டியே 6 ஆம் தேதி அன்றே திறந்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. தகவல் கோரல்

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்பட்டிணம் துறைமுகம் வழியாக கல்குவாரி கற்களை கேரள மாநிலம், விளிஞ்சம் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், இருங்கள், மேற்கொண்டு விவாதம் எதுவும் வேண்டாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், திரு. செ. ராஜேஷ் குமார், என்ன? மாவட்ட பிரச்சினையா? என்னவென்று சொல்லுங்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் என்பது 1,684 சதுர கி.மீ. சுற்றளவு கொண்ட சிறிய மாவட்டம். 35 விழுக்காடு காடுகளும், மலைகளும் சார்ந்த பகுதி. ஏற்கெனவே 50-க்கு மேற்பட்ட கல் குவாரிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்தக் கல் குவாரிகள் மூலமாகக் கேரளாவிற்கு கற்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், விளிஞ்சத்தில் நடைபெறுகின்ற பன்னாட்டு சரக்குப் பெட்டக மாற்று முனையம் துறைமுகத்திற்கு இயற்கை எழில்மிகு கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற இயற்கை வளங்களான கனிம வளங்களை உடைத்து கற்பாறைகளை தேங்காய்பட்டணம் துறைமுகம் வழியாக, கொண்டுபோவதாக திடுக்கிடும் ஒரு தகவல். அப்படிப்பட்ட ஒரு நிலை அங்கு வரக் கூடாது, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து ஒரு துரும்பைக்கூட எவரும் கொண்டு போகக் கூடாது என்பதற்காகத்தான் கடந்த 6 ஆம் தேதியன்று ஒரு கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு notification அனுப்பியிருக்கின்றார்கள். இது முக்கியமான பிரச்சினை. இயற்கை வளங்களை அழிக்காதவாறு ஒரு நல்ல முடிவைத் தாங்கள் எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசும், அதானி நிறுவனமும் இணைந்து, விளிஞ்சம் என்ற பகுதியில் 7,500 கோடி ரூபாய்க்கு மேலே ஒரு* Commercial Harbour-*ஐக் கட்டி, கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து 35 இலட்சம் டன் கற்களை தேங்காய்பட்டணம் துறைமுகம் வழியாகக் கொண்டுசெல்கின்ற* proposal *ஒன்று நம்முடைய அரசால் பெறப்பட்டுள்ளது. அதற்கு மீனவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்ற நிலையில், அதிலும் குறிப்பாக 8 மீனவக் கிராமங்கள், நீரோடி, பூத்தூர், இணையம் பூத்தன்துறை, மிடாலம் உட்பட 8 கிராமங்களும் கடுமையான அளவிற்கு ஆட்சேபம் தெரிவிக்கின்ற நிலையில், கருத்துக் கேட்புக் கூட்டங்கள் பல நடந்தன. அவ்வாறு நடைபெற்ற கூட்டங்களிலெல்லாம், தேங்காய்ப்பட்டணம் வழியாகக் கற்களை* Fishing harbour-*க்குக் கொண்டு செல்லும்போது, அவர்களுக்குப் பலவித இன்னல்கள் ஏற்படுகின்றன என்றும், மீன்பிடித் தொழில் செய்கின்றவர்கள் கடலுக்குச் செல்கின்றபோது, அன்றாடம் தடங்கல் ஏற்படுகின்றது என்றும், அது தவிர, கற்களைக் கொட்டினால் அதனால் பெருமளவு பாதிப்பு ஏற்படும் என்றும்,* Barge *மூலமாக அதைக் கொண்டு செல்வதன் காரணமாக, ஆழப்படுத்தும்போது ஏற்கெனவே போட்டிருக்கின்ற* Groynes, *அதாவது தடுப்புச் சுவர் சரிகின்ற ஒரு நிலை ஏற்படும் என்றும், எந்த நிலையிலும் நாங்கள் கற்களைக் கொண்டு செல்வதை ஏற்க மாட்டோம் என்றும் மீனவர்கள் பல கூட்டங்களில் உறுதிபட தெரிவித்தார்கள். இறுதியாக ஒரு கூட்டம் நடத்தி அவர்கள் கருத்தைக் கேட்கலாம் என நினைத்து 6-ம் தேதி, அதாவது இந்த மாதம் 6-ம் தேதி அந்தக் கூட்டம் கூட்டப்பட்டது. அதற்கு அவர்கள், ஏற்கெனவே நாங்கள் எடுத்த முடிவுதான், அந்த முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்றதால் கூட்டம் நடைபெறவில்லை. எந்த நிலையிலும் தேங்காய்பட்டணம் மீன்பிடித் துறைமுகத்தின்மூலம் விளிஞ்சம் துறைமுகத்திற்கு கற்களை எடுத்துச்செல்வதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்று மீனவர்கள் உறுதியாகச் சொல்லியிருக்கின்ற காரணத்தினால் யாரும் அச்சப்படத் தேவையில்லை. எனவே, மீனவர்களின் கருத்து என்பது மிக மிக முக்கியம். மாண்புமிகு*

2018 ஜூன் 8] [திரு. டி. ஜெயக்குமார்]

அம்மா அவர்களின் அரசைப் பொறுத்தவரை, திருக்குறள் போல. எந்த ஒரு திட்டத்திற்கும் மக்கள் ஆதரவு இருந்தால் நிச்சயமாக அரசினுடைய ஆதரவு இருக்கும்; எந்த ஒரு திட்டத்திற்கும் மக்கள் ஆதரவு இல்லையென்றால் அம்மா அவர்கள் அரசின் ஆதரவு இருக்காது. இதுதான் அரசின் நிலை. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-20

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகளை எடுத்துக்கொள்வது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்கள்* Call Attention, Adjournment Motions-*க்காக அரசாங்கத்தினுடைய கவனத்தை ஈர்க்கலாம் என்று பேரவை விதிகள் 55 மற்றும் 56-ஐ சட்டமன்றத்தில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நான் இந்தக் கூட்டத்தொடரில் பார்க்கிறேன், நீங்கள் இதுவரையில் இரண்டுதான் எடுத்திருக்கிறீர்கள். இன்னும் இருப்பது 14 நாட்கள்தான். எங்களது கட்சியின் சார்பாக மட்டும் கிட்டத்தட்ட 50-க்கும்மேற்பட்ட அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஓர் உறுப்பினருக்கு* Call Attention, Adjournment Motions-*ல் பேச வாய்ப்பு அளிக்கப்பட்டால் சில விஷயங்களில், நேரடியாக அரசின் கவனத்தை ஈர்த்து, பதில் சொல்ல வைக்கமுடியும். எனவே, அதை நீங்கள் எடுக்காமல் இருப்பது நல்லதல்ல என்று நான் கருதுகிறேன். திங்கட்கிழமை முதல் ஒரு நாளைக்கு இரண்டு என்ற வீதத்தில் எடுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பேசிய பிறகு பதில் சொல்லலாம் என இருந்தேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வது, மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவை விதிகள் 55 மற்றும் 56-ன்படி என்னிடம் அறிவிப்புகள் கொடுக்கிறார்கள். அதை நான் சம்பந்தப்பட்ட துறைகளின் பதிலுக்காக அனுப்பி வைத்திருக்கிறேன். சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து விரைவில் பதில்களை அனுப்ப மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், துறைச் செயலாளர்களையும் தனியாக*